# KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.

மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி

காலாண்டுத் தேர்வு 2022 – 2023

வகுப்பு : 9 மாதிரித்தேர்வு - 2 நேரம் : 3.00 மணி

பாடம் : தமிழ் மதிப்பெண்கள் : 100

பகுதி – I

**I. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 15x1=15**

**II. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பது தமிழே!
இவ்வடிகளில் பயன்று வரும் நயங்கள் ………………
அ. முரண், எதுகை, இரட்டைத்தொடை
ஆ. இயைபு, அளபெடை, செந்தொடை
இ. மோனை, எதுகை, இயைபு
ஈ. மோனை, முரண், அந்தாதி

2. நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ. அகழி ஆ. ஆறு இ. இலஞ்சி ஈ. புலரி

3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் ……………..
அ. திசைச்சொற்கள் ஆ. வடசொற்கள்
இ. உரிச்சொற்கள் ஈ. தொகைச்சொற்கள்

4. கீழ்க்காணும் மூன்று தொடர்களுள் …………………..
அ. இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆகும்.
ஆ. திறன் அட்டைகள் என்பவை குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டனவாகும்.
இ. வங்கி அட்டை இல்லை என்றால் அலைபேசி எண், வங்கி கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு பணம் செலுத்துதல் இயலாது.
அ. அ, ஆ ஆகியன சரி ஆ. அ, இ ஆகியன சரி : ஆ தவறு
இ. அ தவறு : ஆ, இ ஆகியன சரி ஈ. மூன்றும் சரி

5. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
அ. தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்
ஆ. தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான
இ. தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்
ஈ. தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

6. சொற்றொடர்களை முறைப்படுத்துக.
அ. ஏறுதழுவுதல் என்பதை
ஆ. தமிழ் அகராதி
இ. தழுவிப்பிடித்தல் என்கிறது
அ. ஆ – அ – இ ஆ. ஆ – இ – அ
இ. இ – ஆ – அ ஈ. இ – அ – ஆ

7. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.
அ. ………. இனம் ஆ. வண்ணம் ………..
இ. ……….. குணம் ஈ. வனப்பு ………..
அ. மூன்று, நூறு, பத்து, எட்டு ஆ. எட்டு, நூறு, பத்து, மூன்று
இ. பத்து, நூறு, எட்டு, மூன்று ஈ. நூறு, பத்து, எட்டு, மூன்று

8. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ. தேசிய திறனறித் தேர்வு
ஆ. ஊரகத் திறனறித் தேர்வு
இ. தேசிய திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு

**எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635**

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

ஈ. மூன்றும் சரி

9. தண்டமிழ் ஆசான், நன்னூற் புலவன் என்றெல்லாம் சிறப்பிக்கப்படுபவர் ………….
   அ. இளங்கோவடிகள் ஆ. சீத்தலைச் சாத்தனார்
   இ. பெருஞ்சித்திரனார் ஈ. திருவள்ளுவர்
10. கவிஞர் வைரமுத்துவின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற புதினம் ……………
   அ. கள்ளிக்காட்டு இதிகாசம் ஆ. மூன்றாம் உலகப் போர்
   இ. தமிழுக்கு நிறம் உண்டு ஈ. தண்ணீர் தேசம்
11. பொருத்தமான விடையைத் தேர்க.
   I. நீரின்று அமையாது உலகு – திருவள்ளுவர்
   II. நீரின்று அமையாது யாக்கை – ஔவையார்
   III. மாமழை போற்றுதும் – இளங்கோவடிகள்
   அ. I, III ஆ. II, III இ. I, II ஈ. I, II, III

**பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும்
கிழக்கு வானம் தூரமில்லை
முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்
பூமி ஒன்றும் பாரமில்லை

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
   அ. வைரமுத்து கவிதைகள் ஆ. தமிழோவியம்
   இ. தமிழ்விடுதூது ஈ. பெரியபுராணம்
13. இப்பாடலின் பயின்றுவரும் எதுகை நயங்களைச் சுட்டுக.
   அ. கிளிக்கு, முளைக்கும் ஆ. கிளிக்கு, கிழக்கு
   இ. முளைக்கும், பூமி ஈ. தூரமில்லை, பாரமில்லை
14. இப்பாடலின் ஆசிரியர் யார்?
   அ. ஈரோடு தமிழன்பன் ஆ. சேக்கிழார்
   இ. சீத்தலைச் சாத்தனார் ஈ. வைரமுத்து
15. விதைகள் முளைக்கத் துடித்தால் எது பாரமில்லை?
   அ. பூமி ஆ. வானம் இ. காற்று ஈ. மலை

பகுதி – II (மதிப்பெண்கள் 18)

**பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4x2=8**
**(21- ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
   அ. அறிவியல் முன்னேற்றத்தால், மனிதனின் பயணநேரம் குறைந்துள்ளது.
   ஆ. ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏரானமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.
17. நீங்கள் பேசும் மொழி எந்த மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது?
18. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.
19. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
   காடும் உடையது அரண் - இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?
20. தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும் ஏன்?
21. ‘விடல்’ என முடியும் குறளை அடிமாறாமல் எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5x2=10**

**22.** அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.
   அ. நம்முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். (வினாத்தொடராக மாற்றுக)
   ஆ. இசையின்றி அமையாது பாடல். (உடன்பாட்டுத் தொடராக மாற்றுக)

**எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635**

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.

**மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி**

**23.** அந்தாதிச் சொற்களை உருவாக்குக.

1. குருவி   2. விருது

**24.** தொடர்கள் தரும் பொருளைக் கூறுக.

அ. சின்னக்கொடி, சின்னகொடி   ஆ. கைம்மாறு, கைமாறு

**25.** கலைச்சொற்கள் தருக.

அ. Hero Stone   ஆ. Missile

26. அகராதி தரும் பொருளை தருக.

அ. சந்தப்பேழை   ஆ. துவனம்

27. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அறைந்தனன்

28. தமிழ் எண்களில் எழுதுக.

அ. பன்னிரண்டு   ஆ. தொண்ணூறு

## பகுதி – III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6**

29. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

30. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம் இவற்றுள் முதலிரண்டும் வேளாண்மையை ஆதாரமாகக் கொண்டவை. வேளாண்மையோ நீரை அடிப்படையாகக் கொண்டது. மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர் ஆகியவற்றைச் சிறிய, பெரிய நீர்நிலைகளில் சேகரிக்க வேண்டும்.

அ. மனிதனின் அடிப்படைத் தேவைகள் யாவை?

ஆ. வேளாண்மை எதை அடிப்படையாகக் கொண்டது?

இ. முந்நீர் விரித்தெழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6**

**(34- ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

32. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

33. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

34. அடிபிறழாமல் எழுதுக.

காடெல்லாம் எனத் தொடங்கும் - பெரியபுராணப் பாடல்   (அல்லது)

ஒன்றறி வதுவே எனத் தொடங்கும் தொல்காப்பியப் பாடல்

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2x3=6**

35. தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். - இதில் பயின்று வரும் அணியை விளக்குக.

37. சலத்தால் பொருள் செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று. - இதில் பயின்று வரும் அணியை விளக்குக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5x5=25**

38. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னோற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுடன் ஒப்பிடுக.

39. உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சிநிரல் ஒன்றினை வடிவமைக்க.

**எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635**

# KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.
**மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி**

(அல்லது)

உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

40. வயதான காலத்தில் பெற்றோர்களைப் பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வுத் தொடர்களை எழுதுக.

41. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



42. **நயம் பாராட்டுக.**

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்
எல்லை விரிந்த சமவெளி – எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்:
ஊறாத ஊற்றிலும் உட்புகுத்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

(அல்லது)

**மொழிபெயர்க்க.**

Bottle xylophone : Make music with bottles
You will need: 6 glass bottles, Wooden spoon, Water, Food coloring.
Fill one bottle with water, then fill each other bottle with slightly less than the bottle next to it.
Add some food coloring to help you to see the different levels of water.
Tap the bottles with the end of a wooden spoon. Can you play a tune?
Water music
Hitting the bottles with the spoon makes them vibrate and produce a sound. The more the bottle vibrates, the higher the note will be. The more water in a bottle, the less it vibrates, so less water means higher notes.

## பகுதி – V (மதிப்பெண்கள் 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **3x8=24**

43. அ. அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்கு தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

44. அ. 'தண்ணீர்' கதையைக் கருபொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(அல்லது)

ஆ. இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

45. அ. குறிப்புகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

**எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635**

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.

**மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி**

'விசும்பின் துளியும் பசும்புல் தலையும்' – என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை – இயற்கையோடு இணைந்து வாழ்வோம் – வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் - மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் - முடிவுரை.

(அல்லது)

ஆ. பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு தருக.

குறிப்புகள் : முன்னுரை – இணையம் – இணையத்தின் வளர்ச்சி – இணையத்தில் இயங்கும் இயந்திரங்கள் – இணைய வணிகம் இயந்திர மனிதன் – இணையக்கல்வி – முடிவுரை.

Padasalai.Net

எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593